II. 1. Instruction to the Teacher / Test Administrator : (if needed)

2. Instruction to the Student / Examinee :

[The sentence 'கிருஷ்ணன் வேடம் போட்டான்' gives two meanings. Explain.]

'கிருஷ்ணன் வேடம் போட்டான்' - என்ற வாக்கியம் இருபொருள் தருகிறது விளக்குக.

3. Question item :

விடை: a. 'கிருஷ்ணன் என்பவன் வேடம் போட்டான்' என்ற பொருளும்

b. ஒருவன் 'கிருஷ்ணனாகக் (கடவுள்) வேடம் போட்டான்' என்ற பொருளும் தருகிறது.

4. Scoring procedure : Enumerative
5. Language input : Ambiguous Sentences - Syntactic Structure
6. Objective : To test the function of syntactic structure of an ambiguous sentence.

பொருள்மயக்க வாக்கியத்தின் தொடரமைப்பின் செயல்பாட்டை நுண்தேர்வு செய்தல்.

7. Name of the item format : Subjective - SQ
8. Administering mode / Medium : Written

9. General Educational Level : L_1 - Higher Secondary
10. Rationale : Mastery with reference to the function and dimension of a syntactic structure of an ambiguous sentence is tested at the production level.
வெளிப்படுத்துநிலையில் ஒரு பொருள்மயக்க வாக்கியத்தின் தொடரமைப்பின் செயல்பாடு மற்றும் அளவு பற்றிய தேர்ச்சித்திறன் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

III. 1. Instruction to the Teacher / Test Administrator : (if needed)

2. Instruction to the Student / Examinee :

[Fill in the blank by selecting an appropriate form to make the sentence into an ambiguous one.]

கொடுக்கப்பட்டுள்ள வாக்கியத்தின் கோடிட்ட இடத்திற்குப் பொருத்தமான சொல்லைக் கொண்டு நிரப்பி மயக்க வாக்கியமாக்குக.

3. Question item :

நான் அப்பாவைப் ________ பணக்காரனாக ஆசைப்படுகிறேன்.

a. போல b. போன்ற

விடை: a. போல

4. Scoring procedure : Enumerative
5. Language input : Ambiguous Sentences - Syntactic Structure
6. Objective : To test the form and boundary of a word which causes ambiguity in a sentence.
ஒரு வாக்கியத்தில் பொருள்மயக்கம் தரும் சொல்லின் வடிவத்தையும் பயன்பாட்டு எல்லையையும் நுண்தேர்வு செய்தல்.
7. Name of the item format : Objective - CA
8. Administering mode / Medium : Written
9. General Educational Level : L_1 - Higher Secondary
10. Rationale : Mastery with reference to the dimension of a word which causes ambiguity in a sentence is tested at the suitability level.
பொருத்தநிலையில் ஒரு வாக்கியத்தில் பொருள்மயக்கம் தரும் சொல்லின் அளவு பற்றிய தேர்ச்சித்திறன் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

130800 SYNTAC /WORD ORDER IN SENTENCES
வாக்கியங்களில் சொல்வரிசை

130801 SYNTAC / WORD ORDER IN SENTENCES / SYNTACTIC BOUND
தொடர்ச் சார்பு

I. 1. Instruction to the Teacher / Test Administrator : (if needed)

2. Instruction to the Student / Examinee :

[Make an acceptable sentence by arranging the given words in a proper order.]

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை வரிசைப்படுத்தி ஏற்றுக்-கொள்ளத்தக்க வாக்கியம் ஒன்றை உருவாக்குக.

3. Question item :

இருக்கிறார்களா, மருத்துவர், நல்ல, இங்கே, யாராவது

விடை: இங்கே நல்ல மருத்துவர் யாராவது இருக்கிறார்களா?

4. Scoring procedure : Enumerative

5. Language input : Ambiguous Sentences / Syntactic Bound

6. Objective : To test the form and function of syntactic units in the formation of a sentence sequence.
ஒரு வாக்கிய அமைப்பில் தொடர்கள் அமையும் வடிவத்தையும் செயல்பாட்டையும் நுண்தேர்வு செய்தல்.

7. Name of the item format : Objective - RA

8. Administering mode / Medium : Written.

9. General Educational Level : L1 - Secondary

10. Rationale : Mastery with reference to the function and dimension of syntactic units in the formation of a sentence is tested at the suitability level.
பொருத்தநிலையில் வாக்கிய அமைப்பில் தொடர்கள் அமையும் செயல்பாடு மற்றும் அளவு பற்றிய தேர்ச்சித்திறன் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

II. 1. Instruction to the Teacher / Test Administrator : (if needed)

2. Instruction to the Student / Examinee :

   Find out the one which is incorrect in word order from the following sentences.

   [கொடுக்கப்பட்டுள்ளவைகளுள் சரியான சொல்வரிசையற்ற வாக்கியத்தைத் தேர்ந்தெடுக்க.]

3. Question item :

   a. நாங்கள் எல்லோரும் நேற்று ஊருக்குப் போயிருந்தோம்.

   b. நேற்று நாங்கள் எல்லோரும் ஊருக்குப் போயிருந்தோம்.

   c. நேற்று எல்லோரும் நாங்கள் ஊருக்குப் போயிருந்தோம்.

   d. ஊருக்கு நாங்கள் எல்லோரும் நேற்றுப் போயிருந்தோம்.

   விடை: c. நேற்று எல்லோரும் நாங்கள் ஊருக்குப் போயிருந்தோம்.

4. Scoring procedure : Enumerative
5. Language input : Ambiguous Sentences / Syntactic Bound
6. Objective : To test the form and function of syntactic units in the formation of a sentence.

   ஒரு வாக்கிய அமைப்பில் தொடர்கள் அமையும் வடிவத்தையும் செயல்பாட்டையும் நுண்தேர்வு செய்தல்.

7. Name of the item format : Objective - MC
8. Administering mode / Medium : Written
9. General Educational Level : L_2 - Basic
10. Rationale : Mastery with reference to the function and dimension of syntactic units in the formation of a sentence is tested at the identification level.

    இனங்காணும்நிலையில் ஒரு வாக்கிய அமைப்பில் தொடர்கள் அமையும் செயல்பாடு மற்றும் அளவு பற்றிய தேர்ச்சித்திறன் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

III. 1. Instruction to the Teacher / Test Administrator : (if needed)

2. Instruction to the Student / Examinee :

   Rearrange the word order of the given sentence without changing the meaning.

[கொடுக்கப்பட்டுள்ள வாக்கியத்தின் சொல்வரிசையைப் பொருள்மாறாத வகையில் மாற்றியமைக்க.]

3. Question item :

நான் கடைவீதிக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் போவேன்.

விடை: ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நான் கடைவீதிக்குப் போவேன்.

4. Scoring procedure : Enumerative
5. Language input : Ambiguous Sentences - Syntactic Bound
6. Objective : To test the form of a sentence with similar syntactic sequence.

   ஒத்த தொடரமைப்பு கொண்ட வாக்கியத்தின் வடிவத்தை நுண்தேர்வு செய்தல்.
7. Name of the item format : Subjective - SQ
8. Administering mode / Medium : Written
9. General Educational Level : L_2 - Intermediate
10. Rationale : Mastery with reference to the dimension of a sentence with similar syntactic sequence is tested at the production level.

   வெளிப்படுத்துநிலையில் ஒத்த தொடரமைப்பு கொண்ட வாக்கியத்தின் அளவு பற்றிய தேர்ச்சித்திறன் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

130900 *SYNTAC /...Anything not covered.*

விடுபட்டவை

131000 *SYNTAC /GENERAL*

பொதுவானவை

SEMANTIC LEVEL
பொருண்மை நிலை

Legend : Chart indicating *Major & Minor components of Semantic Level* along with *Computer Number codes* assigned to them.



Fig.

Source : Pon Subbiah, *Assessing in Language and Literature : A conceptual Frame work.*

140000 SEMANTIC LEVEL
பொருண்மை நிலை

140100 SEMAN / MEANING
பொருள்

140101 SEMAN / MEANING / LEXICAL & GRAMMATICAL
அகராதி மற்றும் இலக்கணப் பொருள்

1. Instruction to the Teacher / Test Administrator : (if needed)
2. Instruction to the Student / Examinee :

   [Give the meaning of the word 'கண்' in the sentence given below.]

   கொடுக்கப்பட்டுள்ள வாக்கியத்தில் வரும் 'கண்' என்பதன் பொருள் எதுவெனக் கூறுக.

3. Question item :

   கண்ணன் தனது அறையின்கண் உட்கார்ந்து ஆழ்ந்து படித்துக் கொண்டிருந்தான்.

   a. *விழி* b. *இடம்*

   விடை: b. *இடம்*

4. Scoring procedure : Enumerative
5. Language input : Meaning - Lexical & Grammatical
6. Objective : To test the function of grammatical meaning of a word.

   ஒரு சொல்லின் இலக்கணப்பொருள் நிலைச் செயல்பாட்டை நுண்தேர்வு செய்தல்.

7. Name of the item format : Objective - CA
8. Administering mode / Medium : Written
9. General Educational Level : L_1 - Secondary
10. Rationale : Mastery with reference to the function and dimension of grammatical meaning of a word is tested at the suitability level.

    பொருத்தநிலையில் ஒரு சொல்லின் இலக்கணப்பொருள் செயல்பாடு மற்றும் அளவு பற்றிய தேர்ச்சித்திறன் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

II. 1. Instruction to the Teacher / Test Administrator : (if needed)

2. Instruction to the Student / Examinee :

[Give the grammatical meaning of the underlined words.]

அடிக்கோடிட்டுள்ள சொற்களின் இலக்கணப் பொருள் தருக.

3. Question item :

a. என் மேல் எதற்குக் கோபப்படுகிறாய்.

b. புத்தகம் மேசை மேல் இருக்கிறது.

விடை: a. என் மீது (மேல் functions as case marker)

b. மேசை மீது (மேல் functions as post position)

4. Scoring procedure : Enumerative

5. Language input : Meaning - Lexical & Grammatical

6. Objective : To test the function of a word in determining the meaning.

ஒரு சொல்லின் இலக்கணப்பொருள் நிலைச் செயல்பாட்டை நுண்தேர்வு செய்தல்.

7. Name of the item format : Subjective - SQ

8. Administering mode / Medium : Written

9. General Educational Level : L_1 - Secondary

10. Rationale (justifications) : Mastery with reference to the function and dimension of a meaning of a word is tested at the production level.

வெளிப்படுத்துநிலையில் ஒரு சொல்லின் இலக்கணப்பொருள் செயல்பாடு மற்றும் அளவு பற்றிய தேர்ச்சித்திறன் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

III. 1. Instruction to the Teacher / Test Administrator : (if needed)

2. Instruction to the Student / Examinee :

[State whether the statement given is correct or not.]

கொடுக்கப்பட்டிருக்கும் கூற்று சரியா தவறா எனக் கூறுக.

3. Question item :

'*மேல்*' என்பதன் அகராதிப் பொருள் '*மேற்பகுதி* அல்லது '*உயரமான இடம்*' என்பதாகும்.

விடை: சரி

4. Scoring procedure : Enumerative
5. Language input : Meaning - Lexical & Grammatical
6. Objective : To test the function of lexical meaning of a word.

   ஒரு சொல்லின் அகராதிப்பொருள் நிலைச் செயல்பாட்டை நுண்தேர்வு செய்தல்.

7. Name of the item format : Objective - CA
8. Administering mode / Medium : Written
9. General Educational Level : L_1 - Secondary
10. Rationale : Mastery with reference to the function and dimension of lexical meaning of a word is tested at the identification level.

    இனங்காணும்நிலையில் ஒரு சொல்லின் அகராதிப்பொருள் செயல்பாடு மற்றும் அளவு பற்றிய தேர்ச்சித்திறன் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

IV.1. Instruction to the Teacher / Test Administrator : (if needed)

2. Instruction to the Student / Examinee :

   [Read the passage carefully and answer the questions listed below.]

   பின்வரும் பகுதியை நன்கு படித்து அடுத்து வரும் வினாக்களுக்கு விடை தருக.

3. Question item :

   கண்ணன் தனது அறையின்கண்(1) உட்கார்ந்து ஆழ்ந்து படித்துக் கொண்டிருந்தான். கண்(2)கள் புத்தகத்தில் பதிந்திருந்தன. அதனால், மனைவி அங்கு வந்ததைக் கவனிக்கவில்லை. அவள் உட்கார இடம்(1) இன்றி மேசை மேல்(1) உட்கார்ந்தாள். அப்பொழுதும் கண்ணன் கவனிக்கவில்லை. அவள் "என் மேல்(2) கோபமா" என்று கேட்டாள். அவள் "என்னிடம்(2) பேசமாட்டீர்களா?" என்றாள். கோபம் தீர்ந்த கண்ணன் "மேலே(3) இருக்கும் அகராதியை எடு" என்றான்.

   [Identify the function of கண் in the phrase அறையின்கண்(1)]

அறையின்கண்(1) என்ற தொடரில் வரும் 'கண்' என்னவாக பயன்படுத்தப் படுகிறது? தேர்ந்தெடுத்து எழுதுக.

a. பெயர்ச் சொல் b. வினைச் சொல்

c. வேற்றுமை உருபு d. உரிச் சொல்

விடை: c. வேற்றுமை உருபு

4. Scoring procedure : Enumerative
5. Language input : Meaning - Lexical & Grammatical
6. Objective : To test the function of a word in determining the meaning.

ஒரு சொல்லின் இலக்கணப்பொருள் நிலைச் செயல்பாட்டை நுண்தேர்வு செய்தல்.

7. Name of the item format : Objective - MF
8. Administering mode / Medium : Written
9. General Educational Level : L_1 - Secondary
10. Rationale : Mastery with reference to the function and dimension of a word in determining the grammatical meaning is tested at the identification level.

இனங்காணும்நிலையில் ஒரு சொல்லின் இலக்கணப்பொருள் செயல்பாடு மற்றும் அளவு பற்றிய தேர்ச்சித்திறன் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

b. 1. Instruction to the Teacher / Test Administrator : (if needed)

2. Instruction to the Student / Examinee :

[State whether the given statement correct or not.]

கொடுக்கப்பட்டுள்ள கூற்று சரியா தவறா எனக் குறிப்பிடுக.

3. Question item :

'இடமின்றி' என்ற தொடரிலும் 'என்னிடம்' என்னும் சொல்லிலும் வரும் இடம் ஒரே இலக்கணப் பொருளைத் தருபவை

a. *சரி* b. *தவறு*

விடை: b. *தவறு*

4. Scoring procedure : Enumerative

5. Language input : Meaning - Lexical & Grammatical
6. Objective : To test the function of a word in determining the grammatical meaning.

   ஒரு சொல்லின் இலக்கணப்பொருள் நிலைச் செயல்பாட்டை நுண்தேர்வு செய்தல்.
7. Name of the item format : Objective - MF
8. Administering mode / Medium : Written
9. General Educational Level : L_1 - Higher Secondary
10. Rationale : Mastery with reference to the function and dimension of a word in determining the grammatical meaning is tested at the identification level.

    இனங்காணும்நிலையில் ஒரு சொல்லின் இலக்கணப்பொருள் செயல்பாடு மற்றும் அளவு பற்றிய தேர்ச்சித்திறன் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

c. 1. Instruction to the Teacher / Test Administrator : (if needed)

2. Instruction to the Student / Examinee :

   [Identify the role of the given markers from the following.]

   கொடுக்கப்பட்டுள்ள உருபுகள் செயல்படும் விதத்தைத் தேர்ந்தெடுக்க.

3. Question item :

   கண்(1), இடம்(2), மேல்(1), மேல்(2), ஆகிய அனைத்தும்.

   a. வெவ்வேறு வகைச் சொற்கள்
   b. வெவ்வேறு இலக்கணப்பொருள் தரும் இடைச் சொற்கள்
   c. சொல்லுருபுகள்
   d. பெயர்ச் சொற்கள்

   விடை: b. வெவ்வேறு இலக்கணப்பொருள் தரும் இடைச்சொற்கள்

4. Scoring procedure : Enumerative
5. Language input : Meaning - Lexical & Grammatical

6. Objective : To test the function of words in determining the grammatical meaning.

ஒரு சொல்லின் இலக்கணப்பொருள் நிலைச் செயல்பாட்டை நுண்தேர்வு செய்தல்.

7. Name of the item format : Objective - MF
8. Administering mode / Medium : Written
9. General Educational Level : L_1 - Higher Secondary
10. Rationale : Mastery with reference to the function and dimension of words in determining the meaning is tested at the suitability level.

பொருத்தநிலையில் ஒரு சொல்லின் இலக்கணப்பொருள் செயல்பாடு மற்றும் அளவு பற்றிய தேர்ச்சித்திறன் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

d. 1. Instruction to the Teacher / Test Administrator : (if needed)

2. Instruction to the Student / Examinee :

[In which category of meaning the underlined word is used whether lexical or grammatical ?]

அடிக்கோடிட்டுள்ள சொல் எந்த வகைப் பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது, இலக்கணப் பொருளிலா அகராதிப் பொருளிலா?

3. Question item :

கண்கள் புத்தகத்தில் பதிந்திருந்தன.

விடை: அகராதிப் பொருளில்

4. Scoring procedure : Enumerative
5. Language input : Meaning - Lexical & Grammatical
6. Objective : To test the function of a word in determining the lexical meaning.

ஒரு சொல்லின் அகராதிப்பொருள் நிலைச் செயல்பாட்டை நுண்தேர்வு செய்தல்.

7. Name of the item format : Objective - MF
8. Administering mode / Medium : Written

9. General Educational Level : L1 - Higher Secondary

10. Rationale : Mastery with reference to the function and dimension of a word in determining the lexical meaning is tested at the identification level.
இனங்காணும்நிலையில் ஒரு சொல்லின் அகராதிப்பொருள் செயல்பாடு மற்றும் அளவு பற்றிய தேர்ச்சித்திறன் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

140102 *SEMAN* / MEANING / *DENOTATIVE OR REFERENTIAL OR DESIGNATIVE*
குறிப்பொருள் / சுட்டுப் பொருள் /
உருவகப் பொருள்

I. 1. Instruction to the Teacher / Test Administrator : (if needed)

2. Instruction to the Student / Examinee :

[Write the class of meaning that the underlined word in each of the following sentence represents.]
கீழ்வரும் வாக்கியங்களிலுள்ள அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் வகையைப் புலப்படுத்துக.

3. Question item :

a. புலி காட்டில் வாழும் விலங்கு.
b. அவன் கணக்கில் புலி.

விடை: a. சுட்டுப் பொருள் b. உருவகப் பொருள்

4. Scoring procedure : Enumerative

5. Language input : Meaning - Denotative

6. Objective : To test the function of the meaning category of a word in determining the meaning.
ஒரு சொல் பொருள் வகையில் / நிலையில் செயல்படும் தன்மையை நுண்தேர்வு செய்தல்.

7. Name of the item format : Subjective - SQ

8. Administering mode / Medium : Written

9. General Educational Level : L1 - Higher Secondary

10. Rationale : Mastery with reference to the function and dimension of meaning category of a word in determining the meaning is tested at the production level.

வெளிப்படுத்துநிலையில் ஒரு சொல்லின் பொருள் வகைச் செயல்பாடு மற்றும் அளவு பற்றிய தேர்ச்சித்திறன் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

II. 1. Instruction to the Teacher / Test Administrator : (if needed)

2. Instruction to the Student / Examinee :

[Fill in the blank by a suitable word.]

கோடிட்ட இடத்தைப் பொருத்தமான சொல் கொண்டு நிரப்புக.

3. Question item :

மஞ்சுவிரட்டுத் தொடங்கிவிட்டது. _____கள்ளெல்லாம் அவிழ்த்து விடப்பட்டன.

a. எருது b. காளை c. பசு

விடை: b. காளை

4. Scoring procedure : Enumerative

5. Language input : Meaning - Denotative

6. Objective : To test the function of the meaning category of a word in determining the meaning.
ஒரு சொல் பொருள் வகையில் / நிலையில் செயல்படும் தன்மையை நுண்தேர்வு செய்தல்.

7. Name of the item format : Objective - MC

8. Administering mode / Medium : Written

9. General Educational Level : L_1 -Secondary

10. Rationale : Mastery with reference to the function and dimension of meaning category of a word in determining the meaning is tested at the suitability level.
பொருத்தநிலையில் ஒரு சொல்லின் பொருள் வகை செயல்பாடு மற்றும் அளவு பற்றிய தேர்ச்சித்திறன் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

140103 *SEMAN* / MEANING / *CONNOTATIVE*

உணர் பொருள் / குறிப்புப் பொருள்

I. 1. Instruction to the Teacher / Test Administrator : (if needed)

2. Instruction to the Student / Examinee :

   [Identify the connotative meaning conveyed by the underlined words of the following sentence.]

   கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் அடிக்கோடிட்ட சொற்கள் காட்டும் குறிப்புப்பொருள் வேறுபாட்டைக் கண்டறிந்து கூறுக.

3. Question item :

   a. சொக்கலிங்கம் சிவலோக பதவி அடைந்தார்.

   b. ராமானுஜம் வைகுண்ட பதவி அடைந்தார்.

   c. அவர் காலமானார்.

   விடை: a. இறந்தவர் சைவர்.

   b. இறந்தவர் வைணவர்.

   c. இறந்தவர் சமயம் பற்றிய குறிப்பு இல்லை.

4. Scoring procedure : Enumerative

5. Language input : Meaning - Connotative

6. Objective : To test the function of words in determining the connotative meaning.

   சொற்கள் குறிப்புப்பொருள் தரும் வகையில் செயல்படும் தன்மையை நுண்தேர்வு செய்தல்.

7. Name of the item format : Subjective - SQ

8. Administering mode / Medium : Written

9. General Educational Level : L_1 - Higher Secondary

10. Rationale : Mastery with reference to the function and dimension of words in determining the connotative meaning is tested at the production level.

    வெளிப்படுத்துநிலையில் சொற்களின் குறிப்புப்பொருள் செயல்பாடு மற்றும் அளவு பற்றிய தேர்ச்சித்திறன் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

II. 1. Instruction to the Teacher / Test Administrator : (if needed)

2. Instruction to the Student / Examinee :

   [Identify the connotative meaning of the given word.]

   கொடுக்கப்பட்டுள்ள சொல் உணர்த்தும் குறிப்புப் பொருளைத் தேர்ந்தெடுக்க.

3. Question item :

பரலோகம்

a. நரகம் b. சொர்க்கம் c. உலகம்

விடை: b. சொர்க்கம்

4. Scoring procedure : Enumerative
5. Language input : Meaning - Connotative
6. Objective : To test the function of a word in determining the connotative meaning.
   ஒரு சொல் குறிப்புப்பொருள் தரும் வகையில் செயல்படும் தன்மையை நுண்தேர்வு செய்தல்.
7. Name of the item format : Objective - MC
8. Administering mode / Medium : Written
9. General Educational Level : L_1 - Higher Secondary
10. Rationale : Mastery with reference to the function and dimension of a word in determining the connotative meaning is tested at the identification level.
    இனங்காணும்நிலையில் ஒரு சொல்லின் குறிப்புப்பொருள் செயல்பாடு மற்றும் அளவு பற்றிய தேர்ச்சித்திறன் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

140104 *SEMAN* / MEANING / *EMOTIVE*

உணர்ச்சிப் பொருள்

I. 1. Instruction to the Teacher / Test Administrator : (if needed)

2. Instruction to the Student / Examinee :

[Identify the sentence in which the word 'கண்' is used with emotive meaning.]

கொடுக்கப்பட்டுள்ளவைகளில் 'கண்' என்ற சொல் உணர்ச்சிப் பொருளில் பயன்படும் வாக்கியத்தைக் குறிப்பிடுக.

3. Question item :

a. பிறந்ததிலிருந்து அவனுக்குக் கண்ணே சரியாகத் தெரியவில்லை.

b. 'கண்ணே! இங்கே வா!' என்று தாய் தன் குழந்தையை அழைத்தாள்.

c. வீட்டின் கண் வளர்ந்த செடி பூத்துக் குலுங்கியது.

விடை: b. 'கண்ணே! இங்கே வா!' என்று தாய் தன் குழந்தையை அழைத்தாள்.

4. Scoring procedure : Enumerative
5. Language input : Meaning - Emotive
6. Objective : To test the form and function of a word in determining the emotive meaning.
   ஒரு சொல்லின் உணர்ச்சிப்பொருள் தரும் வடிவத்தையும் செயல்பாட்டையும் நுண்தேர்வு செய்தல்.
7. Name of the item format : Objective - MC
8. Administering mode / Medium : Written
9. General Educational Level : L1 - Secondary
10. Rationale : Mastery with reference to the function and dimension of a word in determining the emotive meaning is tested at the identification level.
    இனங்காணும்நிலையில் ஒரு சொல்லின் உணர்ச்சிப்பொருள் செயல்பாடு மற்றும் அளவு பற்றிய தேர்ச்சித்திறன் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

II. 1. Instruction to the Teacher / Test Administrator : (if needed)

2. Instruction to the Student / Examinee :

   Use the word 'அன்பு' with emotive meaning.

   ['அன்பு' என்ற சொல் உணர்ச்சிப்பொருளில் பயன்படுமாறு அமைக்க.]

3. Question item :

   விடை: 'அன்பே !'

4. Scoring procedure : Enumerative
5. Language input : Meaning - Emotive

6. Objective : To test the form and function of a word in determining the emotive meaning.
   ஒரு சொல்லின் உணர்ச்சிப்பொருள் தரும் வடிவத்தையும் செயல்பாட்டையும் நுண்தேர்வு செய்தல்.
7. Name of the item format : Subjective - SQ
8. Administering mode / Medium : Written
9. General Educational Level : L_2 - Intermediate
10. Rationale : Mastery with reference to the function and dimension of a word in determining the emotive meaning is tested at the production level.
   வெளிப்படுத்துநிலையில் ஒரு சொல்லின் உணர்ச்சிப்பொருள் செயல்பாடு மற்றும் அளவு பற்றிய தேர்ச்சித்திறன் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

III. 1. Instruction to the Teacher / Test Administrator : (if needed)

2. Instruction to the Student / Examinee :

   [Fill in the blank by selecting a suitable emotive form from the following.]

   கோடிட்ட இடத்தைப் பொருத்தமான உணர்ச்சிப்பொருள் கொண்டு நிரப்புக.

3. Question item :

   ____________ உன்னை ஒருநாளும் மறவேன்.

   a. மாதவியே ! b. மலரே !

   விடை: b. மலரே !

4. Scoring procedure : Enumerative
5. Language input : Meaning - Emotive
6. Objective : To test the form of a word in determining emotive meaning.
   ஒரு சொல்லின் உணர்ச்சிப்பொருள் தரும் வடிவத்தை நுண்தேர்வு செய்தல்.
7. Name of the item format : Objective - CA

8. Administering mode / Medium : Written
9. General Educational Level : L1 - Secondary
10. Rationale : Mastery with reference to the dimension of a word in determining emotive meaning is tested at the suitability level.
பொருத்தநிலையில் ஒரு சொல்லின் உணர்ச்சிப்பொருள் அளவு பற்றிய தேர்ச்சித்திறன் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

140105 *SEMAN* / MEANING / *CONTEXTUAL*

சூழல் பொருள்

I. 1. Instruction to the Teacher / Test Administrator : (if needed)
2. Instruction to the Student / Examinee :

[Choose the contexual meaning of the underlined word from the following.]

அடிக்கோடிடப்பட்ட சொல்லின் சூழல்பொருளைக் கொடுக்கப்-பட்டவைகளிலிருந்து தேர்ந்தெடுத்து எழுதுக.

3. Question item :

"இந்த வீட்டிற்கு நான் மருமகளா? இல்லை, அடிமைதான்." என்றாள் கமலா.

a. வேலைக்காரி
b. உரிமையின்றி வேலை செய்பவள்
c. தொண்டு செய்பவள்

விடை: b. உரிமையின்றி வேலை செய்பவள்

4. Scoring procedure : Enumerative
5. Language input : Meaning - Contextual
6. Objective : To test the boundary of a word in determining the meaning.
ஒரு சொல்லின் சூழல் பொருள் தரும் செயல்பாட்டை நுண்தேர்வு செய்தல்.
7. Name of the item format : Objective - MC
8. Administering mode / Medium : Written
9. General Educational Level : L1 - Secondary

10. Rationale : Mastery with reference to the dimension of a word in determining the contextual meaning is tested at the identification level.
இனங்காணும்நிலையில் ஒரு சொல்லின் சூழல்பொருள் செயல்பாடு மற்றும் அளவு பற்றிய தேர்ச்சித்திறன் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

II. 1. Instruction to the Teacher / Test Administrator : (if needed)

2. Instruction to the Student / Examinee :

[Complete the sentence by an appropriate contexual form of the verb from the following .]

கொடுக்கப்பட்டுள்ள வாக்கியத்தின் கோடிட்ட இடத்தைப் பொருத்தமான சூழல்பொருள் தரும் சொல்லைக் கொண்டு முழுமையாக்குக.

3. Question item :

அவன், அவள் தொலைபேசியில் அழைத்தவுடன் காற்றினும் வேகமாகப் __________ .

விடை: பறந்தான்

4. Scoring procedure : Enumerative

5. Language input : Meaning - Contextual

6. Objective : To test the form and function of a word in determining contextual meaning.
ஒரு சொல்லின் சூழல்பொருள் தரும் வடிவத்தையும் செயல்பாட்டையும் நுண்தேர்வு செய்தல்.

7. Name of the item format : Subjective - Cn.

8. Administering mode / Medium : Written

9. General Educational Level : L1 - Higher Secondary

10. Rationale : Mastery with reference to the function and dimension of a word in determining the contextual meaning is tested at the production level.
வெளிப்படுத்துநிலையில் ஒரு சொல்லின் சூழல்பொருள் செயல்பாடு மற்றும் அளவு பற்றிய தேர்ச்சித்திறன் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

III. 1. Instruction to the Teacher / Test Administrator : (if needed)

2. Instruction to the Student / Examinee :

[Fill in the blank with a suitable contexual form.]

கோடிட்ட இடத்தைச் சூழல் பொருள் தரும் சொல் கொண்டு நிரப்புக.

3. Question item :

அவன் தலைவர் சொன்னபடியெல்லாம் கேட்கிறான்.

என்ற கருத்தை உணர்த்தும் பின்வரும் வாக்கியத்தின் கோடிட்ட இடத்தைச் சூழல்பொருள் தரும் சொல் கொண்டு நிரப்புக.

அந்தத் தொண்டன் அவனுடைய கட்சியின் தலைவருக்கு ______ ஆகிவிட்டான்.

a. வேலைக்காரன் b. அடிமை

விடை: b. அடிமை

4. Scoring procedure : Enumerative

5. Language input : Meaning - Contextual

6. Objective : To test the form and boundary of a word in determining the contextual meaning.

ஒரு சொல்லின் சூழல்பொருள் தரும் வடிவத்தையும் பயன்பாட்டு எல்லையையும் நுண்தேர்வு செய்தல்.

7. Name of the item format : Objective - CA

8. Administering mode / Medium : Written

9. General Educational Level : L_1 - Higher Secondary

10. Rationale : Mastery with reference to the dimension of a word in determining the contextual meaning is tested at the suitability level.

பொருத்தநிலையில் ஒரு சொல்லின் சூழல்பொருள் அளவு பற்றிய தேர்ச்சித்திறன் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

140106 *SEMAN* / MEANING / *FIGURATIVE*

அணிப் பொருள்

I. 1. Instruction to the Teacher / Test Administrator : (if needed)

2. Instruction to the Student / Examinee :

   [Match the meanings of the underlined words of the sentences in 'A' with the types of meanings given in 'B']

   'A'யில் கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியத்திலும் அடிக்-கோடிட்டுள்ள சொல்லின் பொருள் 'B'யில் எந்த வகையைச் சேர்ந்தது என்பதைத் தேர்ந்தெடுத்துப் பொருத்துக.

3. Question item :

A		B	
1.	மழை இல்லாமல் நிலம் காய்ந்து விட்டது. (உலர்தல்)	a.	சூழல்பொருள்
2.	பேசிப் பேசி தொண்டை காய்ந்து விட்டது. (வற்றுதல்)	b.	உருவகப்பொருள்
3.	வறுமையால் அவன் காய்ந்து சருகானான். (துன்பப்படுதல்)	c.	உணர்ச்சிப் பொருள்
4.	அண்டை வீட்டுக்காரரின் வளர்ச்சியைக் கண்டு அவன் மனம் காய்ந்தான். (பொறாமைப் படுதல்)	d.	சுட்டுப் பொருள்

விடை: 1-d-சுட்டுப் பொருள் 2-a-சூழல்பொருள்
3-b-உருவகப் பொருள் 4-c-உணர்ச்சிப் பொருள்

4. Scoring procedure : Enumerative
5. Language input : Meaning - Figurative
6. Objective : To test the function of words in determining the figurative meaning.
   சொற்களின் அணிப்பொருள் செயல்பாட்டை நுண்தேர்வு செய்தல்.
7. Name of the item format : Objective - Mg.
8. Administering mode / Medium : Written
9. General Educational Level : L_1 - Hr. Secondary / UG

10. Rationale : Mastery with reference to the dimension of words in determining the figurative meaning is tested at the identification level.
இனங்காணும்நிலையில் நிலையில் சொற்களின் அணிப்பொருள் அளவு பற்றிய தேர்ச்சித்திறன் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

II. 1. Instruction to the Teacher / Test Administrator : (if needed)

2. Instruction to the Student / Examinee :

[Find out the figurative meaning of the underlined word.]

அடிக்கோடிடப்பட்டுள்ள பகுதி என்ன பொருளில் கையாளப்படுகிறது என்பதைக் கண்டறிக.

3. Question item :

சீட்டாடுவதில் அவன் ஒரு புலி.

விடை: உருவகப் பொருள்

4. Scoring procedure : Enumerative

5. Language input : Meaning - Figurative

6. Objective : To test the function of a word in determining the figurative meaning.
ஒரு சொல்லின் அணிப்பொருள் செயல்பாட்டை நுண்தேர்வு செய்தல்.

7. Name of the item format : Subjective - SQ

8. Administering mode / Medium : Written

9. General Educational Level : L1 - Higher Secondary

10. Rationale : Mastery with reference to the dimension of a word in determining the figurative meaning is tested at the production level.
வெளிப்படுத்துநிலையில் ஒரு சொல்லின் அணிப்பொருள் அளவு பற்றிய தேர்ச்சித்திறன் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

III. 1. Instruction to the Teacher / Test Administrator : (if needed)

2. Instruction to the Student / Examinee :

[How will you explain the underlined word of the given sentence ?]

கொடுக்கப்பட்டுள்ள வாக்கியத்தில் அடிக்கோடிட்ட தொடரை எப்படி விளக்கலாம் ?

3. Question item :

வயல் வெளிகளெல்லாம் பசுமையாய் இருந்தன.

a. பச்சைக் கம்பளம் விரித்திருந்தது

b. வளமாக இருந்தது

விடை: b. வளமாக இருந்தது

4. Scoring procedure : Enumerative
5. Language input : Meaning - Figurative
6. Objective : To test the function of a word in determining the figurative meaning.
   ஒரு சொல்லின் அணிப்பொருள் செயல்பாட்டை நுண்தேர்வு செய்தல்.
7. Name of the item format : Objective - CA
8. Administering mode / Medium : Written
9. General Educational Level : L_1 - Secondary
10. Rationale : Mastery with reference to the dimension of a word in determining the figurative meaning is tested at the suitability level.
    பொருத்தநிலையில் ஒரு சொல்லின் அணிப்பொருள் அளவு பற்றிய தேர்ச்சித்திறன் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

140107 *SEMAN* / MEANING / *IDIOMATIC*

மரபுப் பொருள்

1. Instruction to the Teacher / Test Administrator : (if needed)
2. Instruction to the Student / Examinee :

   [Identify the appropriate meaning of the idiom ' கைவிடு' in the following sentence represents from the given ones.]

   கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தில் 'கைவிடு என்னும் மரபுத் தொடர் எந்தப் பொருளில் பயன்படுகிறது. ?

3. Question item :

   பணத்திற்கு உங்களையே நம்பியிருக்கிறேன், என்னைக் கைவிட்டு விடாதீர்கள்.

   a. கையை எடுத்துக் கொள்ளுதல்

b. விட்டுவிட்டு ஓடிப் போதல்

c. ஏமாற்றம் அடையச் செய்தல்

d. துரோகம் செய்தல்

விடை: c. ஏமாற்றம் அடையச் செய்தல்

4. Scoring procedure : Enumerative
5. Language input : Meaning - Idiomatic
6. Objective : To test the function of a word in determining the idiomatic meaning.
   ஒரு சொல்லின் மரபுப்பொருள் செயல்பாட்டை நுண்தேர்வு செய்தல்.
7. Name of the item format : Objective - MC
8. Administering mode / Medium : Written
9. General Educational Level : L_1 - Secondary
10. Rationale : Mastery with reference to the dimension of a word in determining the idiomatic meaning is tested at the identification level.
    பொருத்தநிலையில் ஒரு சொல்லின் மரபுப்பொருள் அளவு பற்றிய தேர்ச்சித்திறன் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

II. 1. Instruction to the Teacher / Test Administrator : (if needed)

2. Instruction to the Student / Examinee :

Choose the phrase which is different in meaning of the underlined idiomatic word from the following.

[அடிக்கோடிட்ட மரபுத் தொடரின் பொருளுக்கு மாறாகவுள்ள தொடரைக் கொடுக்கப்பட்டுள்ளவைகளிலிருந்து தேர்ந்தெடுத்து எழுதுக.]

3. Question item :

அவன் என்னிடம் கதை அளந்தான்.

a. மிகைப்படுத்திச் சொன்னான்

b. உண்மையைச் சொன்னான்

c. பொய் சொன்னான்

d. இல்லாததைச் சொன்னான்

விடை: b. உண்மையைச் சொன்னான்

4. Scoring procedure : Enumerative
5. Language input : Meaning - Idiomatic
6. Objective : To test the function of a word in determining the idiomatic meaning.
   ஒரு சொல்லின் மரபுப்பொருள் செயல்பாட்டை நுண்தேர்வு செய்தல்.
7. Name of the item format : Objective - MC
8. Administering mode / Medium : Written
9. General Educational Level : L2 - Intermediate
10. Rationale : Mastery with reference to the dimension of a word in determining the idiomatic meaning is tested at the suitability level.
    பொருத்தநிலையில் ஒரு சொல்லின் மரபுப்பொருள் அளவு பற்றிய தேர்ச்சித்திறன் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

III. 1. Instruction to the Teacher / Test Administrator : (if needed)
2. Instruction to the Student / Examinee :

   Give the phrase which is similar in meaning to the underlined idiomatic word.

   [அடிக்கோடிட்ட மரபுத் தொடர் உணர்த்தும் பொருளைத் தரும் வேறொரு தொடரை எழுதுக.]

3. Question item :

   அந்த நோயாளியை டாக்டர் <u>கைகழுவி விட்டார்.</u>

   விடை: 'குணப்படுத்த முடியாது' என்றார்.

4. Scoring procedure : Enumerative
5. Language input : Meaning - Idiomatic
6. Objective : To test the form and function of a word in determining the idiomatic meaning.
   ஒரு சொல்லின் மரபுப்பொருள் செயல்பாட்டையும் வடிவத்தையும் நுண்தேர்வு செய்தல்.
7. Name of the item format : Subjective - SQ
8. Administering mode / Medium : Written

9. General Educational Level : L2 - Intermediate

10. Rationale : Mastery with reference to the dimension of a word in determining the idiomatic meaning is tested at the production level.
வெளிப்படுத்துநிலையில் ஒரு சொல்லின் மரபுப்பொருள் அளவு பற்றிய தேர்ச்சித்திறன் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

140108 *SEMAN* / MEANING / ....*Anything not covered.*
விடுபட்டவை

140200 *SEMAN* / *MEANING RELATIONSHIP*
பொருள்நிலை உறவு

140201 *SEMAN* / MEANING RELATION / *COLLOCATION*
சொல்லிணைவு

I. 1. Instruction to the Teacher / Test Administrator : (if needed)

2. Instruction to the Student / Examinee :

[Fill in the blank by selecting the suitable phrase from those given below]

கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் பொருத்தமான ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கோடிட்ட இடத்தை நிரப்புக.

3. Question item :

யானை ____________ .

a. *கத்துகின்றது* b. *கர்ஜிக்கின்றது*
c. *ஊளையிடுகின்றது* d. *பிளிறுகின்றது*

விடை: d. *பிளிறுகின்றது*

4. Scoring procedure : Enumerative

5. Language input : Meaning Relation - Collocation

6. Objective : To test the form and boundary of a collocation according to the conventional usage of the meaning relationship.
பொருள்நிலைஉறவில் மரபாகப் பயன்படுத்தப்படும் சொல்லிணைவின் வடிவத்தையும் பயன்பாட்டு எல்லையையும் நுண்தேர்வு செய்தல்.

7. Name of the item format : Objective - MC
8. Administering mode / Medium : Written
9. General Educational Level : L_1 - Middle
10. Rationale : Mastery with reference to the dimension of a collocation according to the conventional usage of a meaning relationship is tested at the suitability level.
பொருத்தநிலையில் பொருள்நிலைஉறவின்படி மரபாகப் பயன்படுத்தப்படும் சொல்லிணைவின் அளவு பற்றிய தேர்ச்சித்திறன் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

II. 1. Instruction to the Teacher / Test Administrator : (if needed)

2. Instruction to the Student / Examinee :

[Match the subject nouns given in 'A' with the verbs given in 'B'.]

'A' பகுதியிலுள்ள எழுவாய் ஒவ்வொன்றையும் 'B' பகுதியிலுள்ள வினைமுற்றுக்களுடன் பொருத்துக.

3. Question item :

	A		B
1.	மயில்	a.	கூவும்
2.	குயில்	b.	கரையும்
3.	காகம்	c.	பேசும்
4.	கிளி	d.	அகவும்
		e.	கத்தும்

விடை: 1-d-அகவும் 2-a-கூவும்
3-b-கரையும் 4-c-பேசும்

4. Scoring procedure : Enumerative
5. Language input : Meaning Relation - Collocation
6. Objective : To test the function of collocations according to the conventional usage of the meaning relationship.
பொருள்நிலைஉறவில் மரபாகப் பயன்படுத்தப்படும் சொல்லிணைவின் செயல்பாட்டை நுண்தேர்வு செய்தல்.
7. Name of the item format : Objective - Mg.

8. Administering mode / Medium : Written

9. General Educational Level : L1 - Middle

10. Rationale : Mastery with reference to the function and dimension of collocations according to the conventional usage of the meaning relationship is tested at the identification level.
இனங்காணும்நிலையில் பொருள்நிலைஉறவின்படி மரபாகப் பயன்படுத்தப்படும் சொல்லிணைவின் செயல்பாடு மற்றும் அளவு பற்றிய தேர்ச்சித்திறன் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

III. 1. Instruction to the Teacher / Test Administrator : (if needed)

2. Instruction to the Student / Examinee :

[Fill in the blanks with the names of wind as per the direction in which they flow.]

கோடிட்ட இடங்களைப் பொருத்தமான காற்றின் பெயர்களைக் கொண்டு நிறைவு செய்க.

3. Question item :

a. வடக்கு – வாடை
b. தெற்கு – ____________
c. கிழக்கு – கொண்டல்
d. மேற்கு – ____________

விடை: b. தென்றல் d. கோடை

4. Scoring procedure : Enumerative

5. Language input : Meaning Relation - Collocation

6. Objective : To test the form and boundary of collocations according to the conventional usage of the meaning relationship.
பொருள்நிலைஉறவில் மரபாகப் பயன்படுத்தப்படும் சொல்லிணைவின் வடிவத்தையும் பயன்பாட்டு எல்லையையும் நுண்தேர்வு செய்தல்.

7. Name of the item format : Subjective - Cn.

8. Administering mode / Medium : Written

9. General Educational Level : L1 - Secondary

10. Rationale : Mastery with reference to the dimension of collocations according to the conventional usage of meaning relationship is tested at the production level.
வெளிப்படுத்துநிலையில் பொருள்நிலைஉறவின்படி மரபாகப் பயன்படுத்தப்படும் சொல்லிணைவின் அளவு பற்றிய தேர்ச்சித்திறன் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

140202 *SEMAN* / MEANING RELATION / *SELECTIONAL CHOICE*
சொல் தேர்வு

I. 1. Instruction to the Teacher / Test Administrator : (if needed)

2. Instruction to the Student / Examinee :

[Fill in the blank with a suitable finite verb form.]

கோடிட்ட இடத்தைச் சூழலுக்குப் பொருத்தமான வினைமுற்று வடிவத்தால் நிரப்புக.

3. Question item :

முகமூடி மனிதர் நால்வர் துப்பாக்கியைக் காட்டி வங்கியில் உள்ள பணத்தை ______________ .

விடை: கொள்ளையடித்தனர்

4. Scoring procedure : Analytic

5. Language input : Meaning Relation - Selectional Choice

6. Objective : To test the form and function of a word according to the convention of selectional choice in the meaning relationship.
பொருள்நிலைஉறவில் மரபாகப் பயன்படுத்தப்படும் சொல் தேர்வின் வடிவத்தையும் செயல்பாட்டையும் நுண்தேர்வு செய்தல்.

7. Name of the item format : Subjective - SQ

8. Administering mode / Medium : Written

9. General Educational Level : L_1 - Secondary

10. Rationale : Mastery with reference to the function and dimension of a word according to the convention of selectional choice in the meaning relationship is tested at the production level.

வெளிப்படுத்துநிலையில் பொருள்நிலைஉறவின்படி மரபாகப் பயன்படுத்தப்படும் சொல் தேர்வின் செயல்பாடு மற்றும் அளவு பற்றிய தேர்ச்சித்திறன் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

II. 1. Instruction to the Teacher / Test Administrator : (if needed)

2. Instruction to the Student / Examinee :

[Identify the one which is suitable to replace the underlined verb form.]

அடிக்கோடிட்ட வினைவடிவத்திற்குப் பொருத்தமான மாற்றுவடிவத்தைத் தேர்ந்தெடுக்க.

3. Question item :

அவன் இளநீர் அருந்தினான் .

a. *குடித்தான்*	b. *உறிஞ்சினான்*
c. *சாப்பிட்டான்*	d. *பருகினான்*

விடை: a. *குடித்தான்*

4. Scoring procedure : Enumerative

5. Language input : Meaning Relation - Selectional Choice

6. Objective : To test the form and boundary of a word according to the convention of selectional choice in the meaning relationship.

பொருள்நிலைஉறவில் மரபாகப் பயன்படுத்தப்படும் சொல் தேர்வின் வடிவத்தையும் பயன்பாட்டு எல்லையையும் நுண்தேர்வு செய்தல்.

7. Name of the item format : Objective - MC

8. Administering mode / Medium : Written

9. General Educational Level : L_1 - Secondary

10. Rationale : Mastery with reference to the dimension of a word according to the convention of selectional choice is tested at the suitability level.

பொருத்தநிலையில் பொருள்நிலைஉறவின்படி மரபாகப் பயன்படுத்தப்படும் சொல் தேர்வின் அளவு பற்றிய தேர்ச்சித்திறன் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

III. 1. Instruction to the Teacher / Test Administrator : (if needed)

2. Instruction to the Student / Examinee :

[Match the nouns given in 'A' with the corresponding action verbs given in 'B']

'A' யில் கொடுக்கப்பட்டிருக்கும் பெயர்களை 'B' யில் கொடுக்கப்பட்டிருக்கும் வினைச் சொற்களோடு பொருத்தமாக இணைக்க.

3. Question item :

	A		B
1.	வெங்காயம்	a.	பொரி
2.	வேர்க்கடலை	b.	சுடு
3.	அப்பளம்	c.	வதக்கு
4.	வடை	d.	வறு

விடை: 1 - c- வதக்கு 2 - d- வறு
3 - a- பொரி 4 - b- சுடு

4. Scoring procedure : Enumerative

5. Language input : Meaning Relation - Selectional Choice

6. Objective : To identify the form and boundary of words according to the convention of selectional choice in the meaning relationship.
பொருள்நிலைஉறவில் மரபாகப் பயன்படுத்தப்படும் சொல் தேர்வின் வடிவத்தையும் பயன்பாட்டு எல்லையையும் நுண்தேர்வு செய்தல்.

7. Name of the item format : Objective - Mg.

8. Administering mode / Medium : Written

9. General Educational Level : L_1 - Secondary

10. Rationale : Mastery with reference to the dimension of a word according to the convention of selectional choice is tested at the identification level.
இனங்காணும்நிலையில் பொருள்நிலைஉறவின்படி மரபாகப் பயன்படுத்தப்படும் சொல் தேர்வின் அளவு பற்றிய தேர்ச்சித்திறன் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

140203 *SEMAN* / MEANING RELATION / *SELECTIONAL RESTRICTION*
சொல்தேர்வுக் கட்டுப்பாடு

I. 1. Instruction to the Teacher / Test Administrator : (if needed)

2. Instruction to the Student / Examinee :

[State, from the following sentence which one is appropriate.]
பின்வரும் வாக்கியங்களில் பொருத்தமானது எதுவெனக் குறிப்பிடுக.

3. Question item :

a. *யானை கத்துகிறது* b. *யானை பிளிறுகிறது*

விடை: b. *யானை பிளிறுகிறது*

4. Scoring procedure : Enumerative

5. Language input : Meaning Relation - Selectional Restriction

6. Objective : To test the form and boundary of a word according to the convention of selectional restriction in the meaning relationship.
பொருள்நிலைஉறவில் மரபாகப் பயன்படுத்தப்படும் சொல்தேர்வுக் கட்டுப்பாட்டின் வடிவத்தையும் பயன்பாட்டு எல்லையையும் நுண்தேர்வு செய்தல்.

7. Name of the item format : Objective - CA

8. Administering mode / Medium : Written

9. General Educational Level : L_1 - Middle

10. Rationale : Mastery with reference to the dimension of word according to the convention of selectional restriction in the meaning relationship is tested at the suitability level.
பொருத்தநிலையில் பொருள்நிலைஉறவின்படி மரபாகப் பயன்படுத்தப்படும் சொல்தேர்வுக் கட்டுப்பாட்டு அளவு பற்றிய தேர்ச்சித்திறன் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

II. 1. Instruction to the Teacher / Test Administrator : (if needed)

2. Instruction to the Student / Examinee :

Match every subject listed under 'A' with the relevant verb form listed under 'B'.

['A' பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள பெயர்ச் சொல் ஒவ்வொன்றையும் 'B' பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள தொடர்புடைய வினை வடிவத்துடன் பொருத்துக.]

3. Question item :

	A		B
1.	பழம்	a.	பறக்கிறது
2.	புறா	b.	சிரிக்கிறது
3.	காற்று	c.	இனிக்கிறது
4.	நெருப்பு	d.	வீசுகிறது
		e.	எரிகிறது

விடை: 1-c-இனிக்கிறது 2-a-பறக்கிறது
3-d-வீசுகிறது 4-e-எரிகிறது

4. Scoring procedure : Enumerative
5. Language input : Meaning Relation - Selectional Restriction
6. Objective : To test the form and boundary of words according to the convention of selectional restriction in the meaning relationship.
பொருள்நிலைஉறவில் மரபாகப் பயன்படுத்தப்படும் சொல் தேர்வுக் கட்டுப்பாட்டு வடிவத்தையும் பயன்பாட்டு எல்லையையும் நுண்தேர்வு செய்தல்.
7. Name of the item format : Objective - Mg
8. Administering mode / Medium : Written
9. General Educational Level : L_2 - Intermediate
10. Rationale : Mastery with reference to the dimension of word according to the convention of selectional restriction in the meaning relationship is tested at the identification level.
இனங்காணும்நிலையில் பொருள்நிலைஉறவின்படி மரபாகப் பயன்படுத்தப்படும் சொல்தேர்வுக் கட்டுப்பாட்டு அளவு பற்றிய தேர்ச்சித்திறன் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

III. 1. Instruction to the Teacher / Test Administrator : (if needed)

2. Instruction to the Student / Examinee :

[Fill in the blanks with suitable verb form.]

கோடிட்ட இடங்களைப் பொருத்தமான வினைச்சொல் கொண்டு நிரப்புக.

3. Question item :

   1. நாய் குரைக்கும்.
   2. பசு ____________ .
   3. சிங்கம் கர்ஜிக்கும்.
   4. நரி ____________ .

   விடை: 2. கத்தும்
   4. ஊளையிடும்

4. Scoring procedure : Enumerative

5. Language input : Meaning Relation - Selectional Restriction

6. Objective : To test the form of words according to the convention of selectional restriction in the meaning relationship.
   பொருள்நிலைஉறவில் மரபாகப் பயன்படுத்தப்படும் சொல் தேர்வுக் கட்டுப்பாட்டு வடிவத்தை நுண்தேர்வு செய்தல்.

7. Name of the item format : Subjective - Cn

8. Administering mode / Medium : Written

9. General Educational Level : L_1 - Middle

10. Rationale : Mastery with reference to the dimension of words according to the convention of selectional restriction in the meaning relationship is tested at the production level.
    வெளிப்படுத்துநிலையில் பொருள்நிலைஉறவின்படி மரபாகப் பயன்படுத்தப்படும் சொல்தேர்வுக் கட்டுப்பாட்டு அளவு பற்றிய தேர்ச்சித்திறன் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

140204 *SEMAN* / MEANING RELATION / *COMPATIBILITY*

ஒத்திசைவு

I. 1. Instruction to the Teacher / Test Administrator : (if needed)

2. Instruction to the Student / Examinee :

   [Fill in the blanks by selecting a suitable form from the given compatible words.]

   கோடிட்ட இடங்களைக் கொடுக்கப்பட்டுள்ள ஒத்திசைவுச் சொற்களைக் கொண்டு பொருத்தமாக நிறைவு செய்க.

3. Question item :

   1. குத்துச் சண்டை வீரர் தாராசிங் ________ உடற்கட்டைக் கொண்டவர்.
   2. வடகிழக்குப் பருவ மழையால் நேற்றிலிருந்தே வானம் _____ இருந்தது.
   3. இதுவரைப் பார்த்த நான்கு பெண்களில் __________ இருந்த அந்த முதல் பெண்ணையே அவனுக்குப் பிடித்தது.
   4. தமிழகத்தில் திருச்சி மாவட்டத்தில் தான் _______ ஏராளமாக உள்ளன.

      a. தோப்பும் துரவும்
      b. மூக்கும் முழியுமாக
      c. உருண்டு திரண்ட
      d. மப்பும் மந்தாரமுமாக

   விடை: 1-c-உருண்டு திரண்ட 2-d-மப்பும் மந்தாரமுமாக
   3-b-மூக்கும் முழியுமாக 4-a-தோப்பும் துரவும்

4. Scoring procedure : Enumerative
5. Language input : Meaning Relation - Compatibility
6. Objective : To test the form and function of compatible words in determining the meaning relationship.

   பொருள்நிலைஉறவில் மரபாகப் பயன்படுத்தப்படும் ஒத்திசைவுச் சொற்களின் வடிவத்தையம் செயல்பாட்டையும் நுண்தேர்வு செய்தல்.
7. Name of the item format : Objective - MC
8. Administering mode / Medium : Written
9. General Educational Level : L_1 - Secondary
10. Rationale : Mastery with reference to the function and dimension of compatible words in determining the meaning

relationship is tested at the identification level.
இனங்காணும்நிலையில் பொருள்நிலைஉறவின்படி மரபாகப் பயன்படுத்தப்படும் ஒத்திசைவுச் சொற்களின் செயல்பாடு மற்றும் அளவு பற்றிய தேர்ச்சித்திறன் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

II. 1. Instruction to the Teacher / Test Administrator : (if needed)

2. Instruction to the Student / Examinee :

[Fill in the blanks by choosing a suitable compatible form.]
பொருத்தமான ஒத்திசைவுச் சொல்லைத் தேர்ந்தெடுத்துக் கோடிட்ட இடத்தை நிரப்புக.

3. Question item :

படித்து விட்டு ______ இல்லாதவர்களை யாரும் மதிக்கமாட்டார்கள்.

a. காசு பணம்
b. வேலை வெட்டி
c. வீடு வாசல்

விடை: b. வேலை வெட்டி

4. Scoring procedure : Enumerative
5. Language input : Meaning Relation - Compatibility
6. Objective : To test the form and function of compatible words in determining the meaning relationship.
பொருள்நிலைஉறவின்படி பயன்படுத்தப்படும் ஒத்திசைவுச் சொற்களின் வடிவத்தையும் செயல்பாட்டையும் நுண்தேர்வு செய்தல்.
7. Name of the item format : Objective - MC
8. Administering mode / Medium : Written
9. General Educational Level : L_1 - Secondary
10. Rationale : Mastery with reference to the dimension of compatible words in determining the meaning relationship is tested at the suitability level.
பொருத்தநிலையில் பொருள்நிலைஉறவின்படி பயன்படுத்தப்படும் ஒத்திசைவுச் சொற்களின் அளவு பற்றிய தேர்ச்சித்திறன் நுண்தேர்வு செய்யப்படுகிறது.

140205 *SEMAN* / MEANING RELATION / *SYNONYMY*

ஒருபொருட் பன்மொழி

I. 1. Instruction to the Teacher / Test Administrator : (if needed)

2. Instruction to the Student / Examinee :

[Match every word listed under 'A' with its synonym listed under 'B'.]

'A' பகுதியில் உள்ள சொற்களுக்கு இணையான பொருள் தரும் சொற்களை 'B' யிலுள்ளவற்றோடு பொருத்துக.

3. Question item :

	A		B
1.	கிராமம்	a.	கனி
2.	சுமை	b.	வேந்தன்
3.	பழம்	c.	மலர்
4.	அரசன்	d.	பாரம்
		e.	சிற்றூர்

விடை: 1 - e - சிற்றூர் 2 - d - பாரம்
3 - a - கனி 4 - b - வேந்தன்

4. Scoring procedure : Enumerative

